| 4. | இலங்கை மா அரைத்தல் | தவிடும் குறுந்தவிடும் | தொன்கள் | 8,107 | 3,337.7 | 15,771 | 4,314.7 | 16,910 | 5,645.5 |
| 5. | இலங்கை எண்ணெயும் கொழுப்பும் | கொழுப்பு திராவகம் | தொன்கள் | 1,280 | 2,479.1 | 979 | 2,328.7 | 1,482 | 4,000.0 |
| | | கிளிசறின் | ,, | 148 | 231.2 | 202 | 401.1 | 231 | 514.0 |
| 6. | பெற்றோலியம் | நாப்தா | மெற்றிக் தொன்கள் | 77,210 | 6,039.0 | — | — | — | — |
| | | உலை எண்ணெய் | ,, | 35,000 | 2,499.0 | 548,673 | 57,914.0 | 410,248 | 39,876.8 |
| | | கப்பல் ,, யும், ஏனையவையும் | ,, | வி. கி. | 86,500.0 | 114,062 | 24,438.9 | 114,117 | 29,495.2 |
| 7. | அரசாங்க வன்கலம் | வெட்டுக் கத்திகள் | எண்ணிக்கை | 3,924 | 1.30 | — | — | — | — |
| | | வன்கல விடயங்கள் | அலகுகள் | — | — | 4,000 | 10.0 | 12,000 | 14.0 |
| 8. | பென்சிற்கரி | காரீயம் | | — | — | — | — | — | 9,753.0 |
| 9. | தோற் பொருட்கள் | குரோம் தோல் | க. அடி | | | 8,000 | 19.9 | 108,500 | 356.3 |
| | | பாக் தோல் | இருத்தல்கள் | — | — | 22,249 | 16.2 | 129,756 | 146.0 |
| 10. | சீமேந்து | காங்கேசன்துறை சீமேந்து | தொன்கள் | — | — | — | — | 50 | 6.9 |
| 11. | இலங்கை மீன்பிடி | பிடித்த மீன் | இரு. | — | — | 496,243 | 1,012.0 | 151,541 | 401.9 |
| | | சுறா துடுப்பு | இரு. | — | — | 44,193 | 274.2 | 41,758 | 312.6 |
| | மொத்தம் | | | | 105,299.6 | | 95,283.3 | | 98,309.8 |

† கன மீட்டர்கள்.

மூலம்: கைத்தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சும், அவ்வக் கூட்டுத்தாபனங்களும்.

**3. அரசாங்கத்துறையிலுள்ள கைத்தொழில்கள்**

(அ) உணவு, குடிவகை, புகையிலை

(அ) தேசிய பாற்சபை.

பால் மாவாக்கும் தொழிற்சாலையின் வெளியீடு 1971 இன் ரூ. 131 இலட்சம் இருத்தல்களிலிருந்து, 1972 இல், ரூ. 179 இலட்சம் இருத்தலாக அதிகரித்து, முந்திய ஆண்டைவிட 36 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. உற்பத்திப் பெறுமதியும் இதற்குப் பொருத்தமான அதிகரிப்பைக் காட்டியது. மொத்த விற்பனவு 1972 இல் ரூ. 541 இலட்சமாக அமைந்து கணிசமான அதிகரிப்பைப் பதிவுசெய்தது. பால் மாச்செயற்றிட்டத்திலான இலாபம் 1971 இல் ரூ. 56 இலட்சமாக இருந்தது. 1972க்கான விளைவுகள் இன்னும் இறுதிக் கணிப்புக்குட்படவில்லை. கட்டிப்பால் தொடர்பான தரவுகள் கிடைக்கவில்லை.

(ஆ) எண்ணெய்க் கொழுப்புக் கூட்டுத்தாபனம்

கால்நடை உணவு உற்பத்திப் பொறியின் ஆற்றல் 1971இன் 480 ஆயிரம் தொன்னில் இருந்து, 1972இல் 1,113 ஆயிரம் தொன்னாக அதிகரித்தது. அதன் வெளியீடான 66 ஆயிரம் தொன், கால்நடை உணவுப் பொறியின் உற்பத்தி ஆற்றலில் 92 சதவீதம் பயன்படுத்தப்பட்டதை எடுத்துக்காட்டு கிறது. எண்ணெய் வெளியீடு 131 சதவீதமான அதிகரிப்பைப் பதிவு செய்தது. எனினும் உற்பத்தி ஆற்றலில் இது 30 சதவீதமேயாகும். கொழுப்புத் திராவகத்தின் உற்பத்தி வீழ்ச்சியடைய, கிளிசறின் உற்பத்தியில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை.

மொத்த விற்பனவு முந்திய ஆண்டை விட 66 சதவீதமான உயர்வைப் பதிவுசெய்தது. கொழுப்புத் திராவகத்தினதும், கிளிசரினினதும் ஏற்றுமதியால் வெளிநாட்டுச் செலாவணி வருவாய் 90 சதவீதத்தால் அதிகரித்து, ரூ. 45 இலட்சத்தை எட்டியது. 1973 வரவுசெலவுத்திட்டம்,வெளியீட்டிற் கணிசமான அதிகரிப்பையும் பெருமளவு மொத்த விற்பனையையும் எதிர்பார்க்கின்றது.

அதேவேளையில், இலாபம் முந்திய ஆண்டின் ரூ. 28 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1972 இல் ரூ. 12 இலட்சமாக அமைந்தது. இவ்வீழ்ச்சிக்கு பெருமளவு அதிகரித்த கூலியே காரணமாகும். கூலித் தொகையானது 1971இன் ரூ. 23 இலட்சத்திலிருந்து 1972இல் ரூ. 33 இலட்சமாக அதிகரித்தது.

உள்ளூர்க் கோழிப் பண்ணைத் தொழிலை ஊக்குவிப்பதற்காக வெளிச்சந்தை விலைக்குக் குறைவான மட்டத்திலேயே கால்நடை உணவுப் பொருட்களின் விற்பனை விலையை வைத்திருக்க வேண்டியிருந்தது. இதனால் கூட்டுத்தாபனம், அரசாங்க நன்கொடையைப் பெறுவதற்கு வகை செய்யப்பட்டது. எனவே இலாபத்தைக்கணிக்கும் போது இது கணக்கிலெடுக்கப்பட வேண்டியதாகும்.

(இ) இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம்

கூட்டுத்தாபனத்தின் மொத்த மூலதன முதலீடு 1972 இல் ரூ. 1,465 இலட்சமாக இருந்தது. 1972ஆம் நிதியாண்டுக்குரிய தரவுகள் கிடைக்கப் பெருமையினுல் கூட்டுத்தாபனத்தின் இப்பகுதிக்குரிய செயலாற்றத்தை ஆய்வுசெய்வது முடியாததாக இருக்கின்றது.

(ஈ) அரசாங்க மா அரைத்தற் கூட்டுத்தாபனம்

அரசாங்க மா அரைத்தற் கூட்டுத்தாபனம் 1969இல் தனது வர்த்தக உற்பத்தியை ஆரம்பித்ததிலிருந்து மிக உயர்ந்த ஒரு வெளியீட்டு மட்டத்தைப் பதிவுசெய்துள்ளது. மாவின் வெளியீட்டுப் பெறுமதி 10 ஆயிரம் தொன்களால் அதிகரித்து, 71 ஆயிரம் தொன்னை அடைந்தது. இது, இயலளவிலும் சிறிதளவு கூடியதாகும். இந்த மட்ட உற்பத்தியுடன் கூட்டுத்தாபனம் இலங்கையின் மாவுக்கான கேள்வியில் ஐந்தில் ஒரு பகுதியை மாத்திரம்பூர்த்தி செய்கின்றது. இந்நிலையில் கூட்டுத்தாபனம் சோவியத் தொழில் நுட்ப உதவியுடன் தனது செயலாற்றத்தை 110,000 தொன் உற்பத்திக்கு உயர்த்துவதற்குத் திட்டமிடுகிறது.

தவிடு, குறுந்தவிடு என்பவற்றின் உற்பத்தி, மொத்த விற்பனை என்பவற்றில் அதிகரிப்பும், விலைகளில் மேற்போக்கானமீளாய்வும் ஏற்பட்டிருந்த போதும், முந்திய ஆண்டின் ரூ. 18 இலட்ச இலாபத்துக்கெதிராக இவ்வாண்டு ரூ. 22 இலட்சம் நட்டமடைந்தது. இவை பெரும்பாலும் இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பினுலும் உள்நாட்டு விற்பனை விலையினுலும் ஏற்பட்டதாகும். தவிடு, குறுந்தவிடு என்பவற்றை ஏற்றுமதி செய்து கூட்டுத்தாபனம் ரூ. 57 இலட்சங் கொண்ட தொகையை வெளிநாட்டுச் செலாவணி வருவாயாகப் பெற்றது.

(உ) தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்

வட மாகாணத்தின் குறிஞ்ச தீவில் நிறுவப்பட்ட புதிய உப்பளத்துடன் உப்பு உற்பத்தியிலான கூட்டுத்தாபனத்தின் செயலாற்றம் கணிசமான அளவு அதிகரித்தது இவ்வாண்டு உற்பத்தியைப் பொறுத்து புறநடையான ஒரு நல்ல ஆண்டாக இருந்துடன் சாதகமான காலநிலையாலும், ஏற்கெனவேயுள்ள உப்பளங்களில் ஏற்படுத்தப்பட்ட மேலதிக இயலளவு ஆற்றலாலும், அபிவிருத்தி என்பவற்றுலும் கூட்டுத்தாபனம் 156,250 தொன் உப்பை உற்பத்தி செய்யவும் கொள்வனவு செய்யவும் முடிந்தது இது ஆண்டுக்குரிய உள்நாட்டுக் கேள்வியான 90,000 தொன்களை விட அதிகமானதால் மீதியை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பினைக் கூட்டுத்தாபனம் ஆராய்கின்றது.

வெளியீட்டின் பெறுமதி 1971 இன் ரூ. 38 இலட்சத்திலிருந்து 1972 இல் ரூ. 70 இலட்சத்து 30 ஆயிரமாக இரட்டித்தது. எவ்வாருயினும், விற்பனவுகள் பெரும்பாலும் நிலையாகவும், ஆனல், அதிகரித்த செலவுகள் காரணமாக இலாபம் சிறிது குறைவாகவும் காணப்பட்டது. மட்டுப்படுத்தப்பட்ட விற்பனையானது,

இக் கூட்டுத்தாபனம் அதிகரித்த இலாபகரமான உற்பத்தியினைச் செய்வதற்கு முக்கிய தடையாகவுள்ளது. மூலதன விளைவு விகிதம் முந்திய ஆண்டின் 22.89 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 6.63 சதவீதமாகவும், கூட்டுத் தாபனத்தின் கூலிமட்டம் 1972 இல் ரூ. 32 இலட்சமாகவும் அமைந்தது.

பெரும்பாலும், முந்திய ஆண்டின் விற்கப்படாத கையிருப்புக் காரணமாக 1973 இல் கூட்டுத்தாபனம் தனது குறைவான வெளியீட்டையே திட்டமிட்டது. எவ்வாறுயினும் விற்பனவில் அதிகரிப்பு எதிர்பார்க்கப்படுவதுடன் இலாபத் திலும் ஓரளவு அதிகரிப்பை எதிர்பார்க்கிறது.

**(ஆ) புடவைகள், ஆடைகள், தோற் கைத்தொழில்கள்**

(அ) தேசிய புடவைக் கூட்டுத்தாபனம்

துல்கிரியா ஆலையின் நூல் நூற்றல் நெசவு செய்தல் பகுதிகள் 1971இல் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வாலையில் 17 இலட்சம் இருத்தல் நூலும் 14 இலட்சம் யார்கள் துணியும் இதன் இறுதி இயலளவாக இருக்கும். வியாங்கொடை ஆலையின் உற்பத்திப் பெறுமதி 1971இன் ரூ 373 இலட்சத்திலிருந்து 1972இல் ரூ.366 இலட்சமாகச் சிறிதளவால் வீழ்ச்சியுற்றது. விற்பனையும் இதுபோலச் சிறிதளவால் குறைந்தது.

துல்கிரியா ஆலையின் 1972ஆம் நிதியாண்டுக்கான புள்ளிவிபரத் தரவுகள் கிடைக்கக் கூடியனவாக இல்லையாதலால் கூட்டுத்தாபனத்தின் இக்காலப் பகுதிக்குரிய முழுமையான செயலாற்றத்தை மீளாய்வு செய்ய முடியாதுளது.

(ஆ) இலங்கைத் தோற் பொருட் கூட்டுத்தாபனம்

குருமத் தோலினதும் தோற் பொருட்களினதும் வெளியீடு, அதிகரிப்பைப் பதிவு செய்துள்ள அதே வேளையில் சப்பாத்து உரிதோல் என்பன ஆய்வுக்குரிய ஆண்டில் வீழ்ச்சியடைந்தன. 1972 இன் நடுப்பகுதியில் தோற் பொருட்களின் உற்பத்திக்காக எக்கலைக் கைத்தொழில் நிலையத்தில் புதிய தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட்டது. சிறுதோற்பைகள் கையுறைகள், விளையாட்டுப் பொருட்கள், புடவைக் கைத்தொழிலுக்கு வேண்டிய குத்தூசிகள், தோற் பட்டைகள் போன்ற பொருட்களின் வெளியீடு 46 சதவீதத்தால் உயர்ந்தது. தோற் பொருட்களின் முழு வெளியீட்டையும் உள்நாட்டுச் சந்தை நுகர்வு செய்தது.

உண்ணாட்டுச் சந்தைக் கேள்வியால் ஊக்குவிக்கப்பட்ட உற்பத்தி காரணமாக, கூட்டுத்தாபனத்தின் சப்பாத்துத் தொழிற்சாலை தனது இயலளவில் 67 சதவீதத்தை உற்பத்தி செய்தது. கைத்தொழிலிலுள்ள தனியார் நிறுவனங்களின் அதிகரித்த போட்டி காரணமாகச் சப்பாத்தின் கையிருப்பு ஒன்றுதிரண்டதாக அமைந்தது. சில குறிப்பிட்ட மூலப் பொருட்களைத் தனிப் பட்ட உற்பத்தியாளருக்கு நிரம்பல் செய்வதற்குக் கூட்டுத்தாபனம் தலையிட்டதால் 1972 இல் தோற் கைத்தொழிலில் சில அமைப்பு மாற்றங்களைக் காணக் கூடியதாக உளது. உதாரணமாக வரையறுக்கப்பட்ட இலங்கை இந்தியத்

தோற் கூட்டுநிலையத்தில் பதனிட்ட குரோமத் தோல் தயாரிப்பு உற்பத்தி விநியோகம் என்பன கூட்டுத்தாபனத்தினுல் கையேற்கப்பட்டன.

மேலும் கூட்டுத்தாபனம் உண்ணுட்டுத் தோல் பதனிடுவோருக்கு வேண்டிய இரசாயனப் பொருட்களையும் நிரம்பல் செய்கிறது.

கூட்டுத்தாபனம் ரூ. 5 இலட்சம் பெறுமதியான குரோமத் தோலையும் உரிதோலையும் ஏற்றுமதி செய்தமை கவனிக்கத்தக்கது. அதன் ஆரம்ப நிலையிலிருந்து இதுவே அதன் உயர்ந்த ஆண்டு உற்பத்தியாகும். முந்திய ஆண்டின் நட்டத்திற்கெதிராக இக் கூட்டுத்தாபனம் ரூ. 272 ஆயிரத்தைப் பதிவுசெய்தது. வேலை வாய்ப்பு 1971 இல் 908 ஆகவிருந்து 1972 இல் 899 ஆக வீழ்ச்சியடைந்தது.

(இ) மரமும் மர உற்பத்திகளும்

(அ) இலங்கை ஒட்டுப்பலகைக் கூட்டுத்தாபனம் :

அவிசாவலையில் மரவேலைப் பகுதி ஆரம்பிக்கப்பட்டதுடன் கூட்டுத்தாபனம் மொத்தமாக 1,050 இலட்சம் சதுர அடி கொண்ட மூவொட்டுப் பலகையைத் தயாரிக்கக் கூடிய செயலாற்றத்தைப் பெற்றது. மரத்தூளிலிருந்து பலகை செய்யும் பொறி 1971 இன் கடைசிப் பகுதியில் இயங்க ஆரம்பித்தது. ஒட்டுப் பலகைத் தொழிற்சாலை 1972 இன் நடுப்பகுதியில் தனது உற்பத்தியை ஆரம்பித்தது.

1970/71 ஆம் ஆண்டில் 10 இலட்சத்து 43 ஆயிரமாக விளங்கிய தேயிலைப் பெட்டிகளின் உற்பத்தி 1972 இல் 11 இலட்சத்து 81 ஆயிரமாக அதிகரித்தது 1973 இல் திட்டமிடப்பட்ட 2 இலட்சத்து 60 ஆயிரம் தொகையான தேயிலைப். பெட்டிகளின் வெளியீடு 1972 ஆம் ஆண்டு வெளியீட்டினைவிட 112 சதவீதம் உயர்வானதாகும். இது அண்மை ஆண்டுகளின் உற்பத்திப் போக்கில் தொடர்ச்சியான அதிகரிப்பைப் பிரதிபலிக்கிறது. ஜின்தோட்டைத் தொழிற்சாலையின் குறைந்தளவு இயலளவுப் பயன்பாட்டுக்கு வெட்டு மரங்களின் நிரம்பலிலுள்ள ஒழுங்கின்மையே காரணமாகும்.

தற்போது கூட்டுத்தாபனமே தேயிலைப் பெட்டிகள் மரப் பொருட்கள் என்பவற்றின் இறக்குமதி விநியோகம் என்பவற்றுக்குப் பொறுப்பாயுள்ளது. இதனுல் மொத்த வருமானம் 1972 இல் கணிசமான அளவு அதிகரித்தது. மிக உயர்ந்த மொத்த வருமானத்தின்போது கூட்டுத்தாபனம் பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் 14 4 சதவீத விளைவைப் பிரதிபலிக்கும் ரூ 15 இலட்சத்து 60 ஆயிரம்இலாபத்தையீட்டியது. இக்கூட்டுத்தாபனத்தினுல் முதலிடப்பட்ட மொத்த மூலதனம் ரூ 1,245 இலட்சமாகும். 1973 இல் கூட்டுத்தாபனம் தனது வெளியீட்டை இரண்டு மடங்குக்கு மேலாக அதிகரிக்க எண்ணியுள்ளது.

(ஆ) அரசாங்க மரக் கூட்டுத்தாபனம் :

ஆய்வுக்குரிய ஆண்டில் கூட்டுத்தாபனம் போக்குவரத்து உபகரணங்கள், கட்டட வேலை போன்ற புதிய மூலதனச் சொத்துக்களில் ரூ 97 இலட்சத்தை முதலிட்டது. உற்பத்தியும் விற்பனையும் முந்திய ஆண்டைவிட 1972 இல் உயர்ந்ததாக இருந்தது. மொத்த வருமானம் அதிகரித்த போதிலும், கூட்டுத் தாபனம் 1971 இல் பெற்ற ரூ. 11 இலட்ச இலாபத்துடன் ஒப்பிடுகையில் 1972 இல் ரூ 34 இலட்சமான மதிப்பீட்டு நட்டத்தை அடைந்தது. இதனால் கூலி மட்டம் 1971 இல் ரூ 42 இலட்சத்திலிருந்து 1972 இல் ரூ. 62 இலட்ச மாக அதிகரித்தது. அதேவேளையில் 1973 இல் நட்டம் ரூ. 24 இலட்சமாக வீழ்ச்சியடையுமென மதிப்பிடப்பட்டது. கூட்டுத்தாபனம் 1972 இல் ரூ. 2 இலட்சத்து 80 ஆயிரம் பெறுமதி வாய்ந்த 1,856 கன அடி மரத் துண்டுகளை மொத்தமாக ஏற்றுமதி செய்தது.

(ஈ) தாளும் தாள் உற்பத்தியும் அச்சிடுதலும் வெளியிடுதலும் :-

(அ) கிழைத்தாள் ஆலைக் கூட்டுத்தாபனம் :

வாழைச்சேனையிலுள்ள தாள்மட்டை ஆலை ஆண்டுதோறும் 12,000 தொன் கள் தாள் மட்டைத் தயாரிப்பு இயலளவுடன் 1972 மேயில் அதன் வர்த்தக உற்பத்தியை ஆரம்பித்தது. வாழைச்சேனையிலுள்ள பழைய ஆலையுடன் இக் கூட்டுத்தாபனம் தற்போது ஆண்டுதோறும் 22,500 தொன் தாள் உற்பத்தி இயலளவுடையதாக விளங்குகின்றது.

தாள், தாளுற்பத்தியின் வெளியீடு 52 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த விற்பனையில் ஏற்பட்ட அதிகரிப்பு முந்திய ஆண்டின் 72 சதவீதமா கும். மொத்த விற்பனையில் ஏற்பட்ட சார்பு ரீதியான உயர்ந்த வளர்ச்சி, 1971 நவம்பரிலிருந்து எல்லாத் தரத்திலுமுள்ள உள்நாட்டுத் தாள்களினதும் விலைகளின் மேலெழும் மாற்றத்தின் பயனாக ஏற்பட்டதாகும். அதிகரித்த உற்பத்திச் செலவு காரணமாக, தயாரிப்பு நடவடிக்கையை ஆரம்பித்த நாளி லிருந்து 1971 ஆம் ஆண்டின் கடைசி மூன்று காற்பகுதிகளிலும் கூட்டுத் தாபனம் நட்டத்தை அடைந்துள்ளது. 1972 ஆம் ஆண்டின் தயாரிப்பு நட வடிக்கைகளின் பயனாக நிதி பற்றிய முடிவுகள் பெறக்கூடியனவாயில்லை.

சராசரி இயலளவுப் பயன்பாடு 1971 இன் 87 சதவீதத்திலிருந்து 1972 இல் 62 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. இக்குறைவான இயலளவுப் பயன்பாடு, புதிய தாள் மட்டை ஆலையைத் தாள் கூழ், தாள் பொறியுடன் இணைக்கப் பட்டதனால் ஏற்பட்ட உற்பத்தி இடை நிறுத்தம் காரணமாக நேர்ந்ததாகும். குறைந்த தொகையான உற்பத்திக்குக் குறைவான கிராம் நிறையுடன் உயர்ந்த தரயான தாளை உற்பத்தி செய்தமையே காரணமாகும்.

இக்கூட்டுத்தாபனமும் இறக்குமதி செய்யப்பட்ட தாள் வர்த்தகத்தில் ஈடுபடுகிறது. அதன் தாள் இறக்குமதி 1966-67 இலிருந்து வீழ்ச்சியடைந்து செல்கிறது. அச்சடிக்கும் தாள், எழுதுதாள் என்பவற்றை ஆண்டுதோறும் 15,000 தொன் இயலளவில் உற்பத்தி செய்வதற்காகக் கூட்டுத்தாபனம்

தாள் கூழ், தாள் தொழிற்சாலையொன்றை எம்பிலிப்பிட்டியாவில் கட்டத் தொடங்கியுள்ளது. இராஜாங்கனையில் இன்னுமோர் ஆலையைக் கட்டுவதற்கான திட்டமொன்று தீர்மானிக்கப்படுகிறது.

இக்கூட்டுத்தாபனத்தின் வேலை வாய்ப்பு 339 ஆல் அதிகரித்து 1972 இல் 2,220ஐ அடைந்துள்ளது.

(ஆ) அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம் :

இக்கூட்டுத்தாபனத்தின் மொத்த முதலீடு 1972 இல் ரூ. 101 இலட்சமாகும். 1972 நிதியாண்டுக்கான தரவுகள் கிடைக்கவில்லை.

**(உ) இரசாயன, பெற்றோலிய, றப்பர், பிளாத்திக்குப் பொருட்கள் :**

(அ) பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் :

கூட்டுத்தாபனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட முதன்மையானவிடயங்கள் அனைத்தினதும் வெளியீடு 1972இல் அதிகரித்துள்ளது. குளோரின் திராவகத்தினதும், கைட்ரோ குளோரைட்டினதும் உற்பத்தி இயலளவுப் பயன்பாடு முறையே 44 சதவீதமாகவும், 32 சதவீதமாகவும் அமைந்தது. இயலளவுப் பயன்பாட்டின் குறைவுக்குஇப்பொருட்களுக்கான வரையறுக்கப்பட்டசந்தையே காரணமாகும். விற்பனவுப் பெறுமதி கணிசமான அளவில் 27 சதவீதத்தால் அதிகரித்து 1972 இல் ரூ.52 இலட்சத்தை அடைந்தது. இது பெருமளவில் எரிசோடாக் கட்டியின் விலை தொன்னொன்று ரூ. 1,800 இலிருந்து ரூ. 1,920 ஆக அதிகரித்தமையாலும் கல்சியம் குளோரைட் தொன்னொன்று ரூ. 700 இலிருந்து ரூ. 1,500 ஆக அதிகரித்தமையாலும் ஏற்பட்டதாகும். மிக உயர்ந்த மொத்த விற்பனையின் போது கூட்டுத்தாபனம் தனது தயாரிப்பு நடவடிக்கைகள் வாயிலாக 1972இல் ரூ.3 இலட்சம் இலாபமீட்டியது. இது பயன்படுத்தப்பட்ட மூலதனத்தில் 2.8 சதவீத விளைவை எடுத்துக் காட்டியது. எவ்வாறாயினும் ஆய்வுக்குரிய ஆண்டில் கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாபங்கள் வீழ்ச்சியடைந்தன.

(ஆ) இலங்கை ரயர்க் கூட்டுத்தாபனம் :

ரயர்க் கூட்டுத்தாபனம் 250,000 ரயர்களையும் 250,000 ரியூப்புகளையும் உற்பத்தி செய்யக்கூடிய இயலளவுடையது. விற்பனவு இடையூறுகள் காரணமாக பாரவண்டி ரயர்களின் உற்பத்தி நிதானித்து மட்டுப்படுத்தப்பட்டது. ரயர் உற்பத்தி 1971 இன் 158,400 இலிருந்து 1972 இல் 149,293 ஆக வீழ்ச்சியடைந்தது. கூட்டுத்தாபனத்தில் குறிப்பிட்ட சில அளவு ரயர்கள் செய்வதற்கு மட்டுமே அச்சுக்கள் இருந்தமையால் இயலளவுப் பயன்பாடு தொடர்ந்தும் குறைந்த மட்டத்திலேயே இருந்தது.

உற்பத்தியின் பெறுமதி எல்லையளவில் அதிகரித்தது. அதேவேளையில், விற்பனவுப்பெறுமதி ரூ. 83 இலட்சத்தால் அதிகரித்து 1972இல் ரூ.519 இலட்சத்தை

யடைந்தது. ஆய்வுக்குரிய ஆண்டில் கூட்டுத்தாபனம் வரிக்கு முந்திய இலாபமாகச் சென்ற ஆண்டுபெற்ற ரூ. 85 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ.95 இலட்சத்தைப் பெற்றது. இவ்வாண்டு விளைவு பயன்படுத்தப்பட்ட மூலதனத்தில் 13.84 சதவீத மாகவும், முதலிடப்பட்ட மூலதனமான ரூ. 1,002 இலட்சத்தில் 9.3 சதவீத மாகவும் காணப்பட்டது. உள்நாட்டு மூலப் பொருட்களின் பாவனை 1970/71 இல் 27 சதவீதமாகவிருந்து, 1971/72 இல் 21 சதவீதமாக வீழ்ச்சியடைந்தது. வேலை வாய்ப்பு 1971இல் 1,657 ஆகவிருந்து 1972இல் 1,893 ஆக அதிகரித்தது.

(இ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

எண்ணெய் தூய்மை ஆக்கல் :

பெற்றோலியப் பொருட்களின் உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் தூய்மையாக்கப்படாத எண்ணெயைத் தூய்மையாக்கும் இயலளவை 18 இலட்சம் தொன்னிலிருந்து 22 இலட்சம் தொன்னாக உயர்த்துவதற்குக் கூட்டுத்தாபனம் திட்ட மிட்டுள்ளது.

எண்ணெய் தூய்மையாக்கல் உற்பத்தி 1971 இல் 14 இலட்சம் மெட்றிக் தொன்னாக இருந்து 1972 இல் 16 இலட்சம் மெட்றிக் தொன்னாக அதிகரித்தது. அதன் எல்லா உற்பத்திகளினதும் வெளியீட்டுப் பெறுமதி ரூ.1,010இலட்சத்தால் உயர்ந்து 1972 இல் ரூ. 2,350 இலட்சத்தையடைந்தது. இது பிரதானமாக இப் பொருட்களின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் ஏற்பட்டதாகும். தூய் மையாக்கலுக்கான சுத்திகரிக்கப்படாத எண்ணெயின் இறக்குமதி 17 சதவீதத் தால் அதிகரித்தது. அதே வேளையில் இறக்குமதி விலைகளின் அதிகரிப்புக் கார ணமாக இறக்குமதிகளின் பெறுமதி 35 சதவீதத்தால் உயர்ந்தது. தற்காலி கமான தரவுகளின்படி தூய்மைப்படுத்தும் ஆலை முந்திய ஆண்டிற் பெற்ற ரூ. 173 இலட்ச இலாபத்துக்கெதிராக 1972 இல் ரூ. 331 இலட்ச இலாபத்தை யீட்டியது.

உராய்வு எண்ணெய் கலக்கும் பொறி

இப்பொறியில் மூல எண்ணெய்களும் பிறசேர்க்கைகளும் பல்வேறு தரமான உராய்வுஎண்ணெய்களாகக் கலக்கப்படுகின்றன. வெளியீட்டின் அளவு,பெறுமதி இரண்டிலும் சிறியளவு வீழ்ச்சி காணப்பட்டது எனினும் வெளியீட்டு மட்டம் சந் தைத் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியதாயிருந்தது. விற்பனவுத் தொகை யில் வீழ்ச்சி ஏற்பட்டபோதும், விலை மாற்றங்களின் மேற்போக்கான மீளாய்வு காரணமாக ஒரு கலனின் விலை 10 சதத்தால் அதிகரித்து உண்ணாட்டு மொத்த விற்பனவுவருமானம் அதிகரித்தது. இது அதன் கொள்வனவு விலை அதிகரிப்பி னால் ஏற்பட்டதாகும். உ+ப். மூல எண்ணெய்களும் பிற சேர்க்கைகளும்.

(ஈ) ஆயுள் வேத மருந்துக் கூட்டுத்தாபனம்.

சிறு கைத்தொழிற் கூட்டுத்தாபனத்தின் ஆயுள்வேத மருந்துகள் தயாரிக்கும் பகுதியின் நடவடிக்கைகளை 1969 இல் ஆயுள் வேத மருந்துக் கூட்டுத்தாபனம் கையேற்றது. மருந்துகளைத் தயாரிப்பதுடன் இக்கூட்டுத்தாபனம் மூலப் பொருள், தயாரிக்கப்பட்ட ஆயுள்வேத, சித்த, யூனனி மற்றும் மருந்துகளை இறக்குமதி செய்வதிலும் விநியோகிப்பதிலும் ஈடுபடுகிறது.

வெளியீட்டின் பெறுமதி முந்திய ஆண்டை விட 1972 இல் இரண்டு மடங்காகியது. அதே வேளையில், கூட்டுத்தாபனம் 1973 இல் கணிசமான அளவு உயர்ந்த வெளியீட்டிற்குத் திட்டமிட்டது. 1971ஐ விட1972 ல் ஏற்பட்ட அதிகரித்தமொத்தவருமானம் 1972யூனில் விலைகளில் செய்யப்பட்ட மேற்போக்கான திருத்தத்தினுல் ஏற்பட்டதாகும். அதன் தயாரிப்பு நடவடிக்கைகளின் வாயிலாகப் பெறப்படும் இலாபம் முந்திய இலாபத்தின் ரூ. 2, 60, 000 இற்கெதிராக 1972 இல் ரூ. 3,50,000 ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. வேலைவாய்ப்பு 1971 இன் 201 இலிருந்து 1972 இல் 329 ஆக அதிகரித்தது.

(உ) அரசாங்க உர உற்பத்திக் கூட்டுத்தாபனம்:

1966 இல் நிறுவப்பட்ட இக்கூட்டுத்தாபனம் ஆண்டு இயலளவான 2,80,000 தொன் யூரியாவை உற்பத்தி செய்யும் திட்டத்தை அமுல் நடத்த எண்ணியுள்ளது. உற்பத்திக்கான முக்கிய மூலப் பொருளாக சபுகஸ்கந்த எண்ணெய் தூய்மையாக்கலின் பக்க உற்பத்திப் பொருளான நப்தா அமையும். இத்திட்டம் ஏறக்குறைய ரூ. 3,500 இலட்சம் செலவுடையதாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

**(ஊ) உலோகமற்ற கனிப் பொருட்கள் (பெற்ரேலிய உற்பத்திகள் தவிர)**

(அ) இலங்கை மட்பாண்டக் கூட்டுத்தாபனம்:—

இக்கூட்டுத்தாபனத்தின் எல்லா வகையான உற்பத்திப் பொருட்களினதும் வெளியீடு 1972 இல் எல்லா வகையிலும் அதிகரித்துள்ளது. வட்டில்கள், சுகாதாரப் பொருட்கள் பிரிவு, இயலளவுக்கு மேலான உற்பத்தியைப் பதிவுசெய்தது. சந்தைக் கட்டுப்பாடு காரணமாக கயோலின் தூய்மையாக்கலின் உற்பத்தி அதன் இயலளவுக்குப் 15 சதவீதம் குறைவாகவே அமைந்தது. 1970/71 ஆய்வுக்குரிய ஆண்டில் உற்பத்தியின் பெறுமதி 34 சதவீதத்தால் உயர்ந்து ரூ. 129 இலட்சமாக அமைந்தது. 1972 இன் மிக உயர்ந்த மொத்த வருமானத்தின்போது கூட்டுத்தாபனம் கணிசமான அளவு உயர்ந்த இலாபமான ரூ. 55 இலட்சத்தைப் பெற்றது. பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் விளைவு 27.5 சதவீதமாக அமைந்தது.

கூட்டுத்தாபனம்ஆண்டுதோறும் 1,040 தொன் புரூேசிலென் மேசை விரிப்பு உற்பத்தி இயலளவு கொண்ட ஒரு மட்பாண்டத் தொழிற்சாலையை இரத் தோட்டையில் நிறுவுவதற்கு முயற்சிகள் எடுத்துளது. இப்பொறி மூலம் 1973 இன் முடிவில் உற்பத்தியை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுளது.

வேலைவாய்ப்பு 1971 இன் 1,060 இற்கெதிராக 1972 இல் 1,256 ஆக அமைந்தது.

(ஆ) இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனம்:—

சீமெந்துத் தொழிற்சாலைகள் மூன்றினதும் மொத்த வெளியீடு 1971 இன் 379,000 தொன்னிலிருந்து 1972 இல் 377,000 தொன்களாக சிறிதளவு வீழ்ச்சியடைந்தது. புத்தளம் சீமெந்து வேலைகளில் இரண்டாவது கட்டத்தின் ஆரம்பத்துடன் மூன்று தொழிற்சாலைகளினதும் முழுமையான ஆண்டு உற்பத்தி 1973 இல்59 சதவீதத்தினால் அதிகரித்து 597,000 தொன்களை அடையுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

மொத்த வருமானத்தில் சிறிதளவு வீழ்ச்சி காணப்படினும் கூட்டுத்தாப னத்தின் இலாபம் ரூ 60 இலட்சத்தால் (33 சதவீதம்) அதிகரித்து, 1972 இல் ரூ. 200 இலட்சத்தையடைந்தது. அதேவேளை பயன்படுத்தப்பட்ட மூல தனத்தின் விளைவு 11.6 சதவீதமாகும்.

நிறுவப்பட்ட இயலளவின் முழுப் பயன்பாடு 63 சதவீதமாகும். காலியி லுள்ள பொறியின் இயலளவுப் பயன்பாட்டிலேற்பட்ட குறைவு கிளிங்கர் பெறுவதிலுள்ள தடைகளினால் ஏற்பட்டது.

தற்போது, கூட்டுத்தாபனம் புத்தள சீமெந்து வேலைகளின் இரண்டாவது, கட்டம் ஆரம்பித்த பின் தனது வெளியீட்டில் ஒரு பகுதியை ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புப் பற்றி ஆராய்ந்து வருகிறது. 1972 இல் கூட்டுத் தாபனம் சீமெந்து ஏற்றுமதி மூலம் ரூ. 6 ஆயிரத்தை வருவாயாகப் பெற்றது. வேலை வாய்ப்பு 1971 இல் 2,628 ஆகவிருந்து 1972 இல் 2,268 ஆக அதிகரித்தது.

(இ) தேசிய சிறு கைத்தொழில் கூட்டுத்தாபனம்:—

பல்வகைப்பட்ட உற்பத்திகளை முன்பு உற்பத்தி செய்த இக்கூட்டுத்தாப னம் இதனின் பல்வேறு நடவடிக்கைகளை இதனுடன் தொடர்புடைய கைத் தொழில் அறிவியல் அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கும் கூட்டுத்தாபனங் களுக்கு ஒப்படைத்துள்ளது. இதனின் செங்கட்டி ஓட்டுத் தொழிற்சாலைகள் 1972 ஒற்ரூேபர் 1 இல் இலங்கை மட்பாண்டத் தொழிற்சாலைக்கு ஒப் படைக்கப்பட்டிருக்க, 1972 நவம்பர் 1 இல் தச்சு வேலைத்தலங்கள் இலங்கை ஓட்டுப்பலகைக் கூட்டுத்தாபனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது.

மீளப்பார்வையிடப்படும் இவ்வாண்டில் செங்கட்டி உற்பத்தி வீழ்ச்சியினைப் பதிவு செய்தது எனினும் மொத்த வெளியீட்டின் பெறுமதி எல்லையளவால் அதிகரித்து ரூ. 1,120 இலட்சமாக விளங்கியது.

(ஈ) கனிப்பொருள் மணற் கூட்டுத்தாபனம்

மீளப்பார்வையிடும் ஆண்டில் இக்கூட்டுத்தாபனத்தினுல் உற்பத்தி செய்யப்படும் எல்லாப் பொருட்களினதும் உற்பத்தி அளவிலும் வீழ்ச்சி ஏற்பட்டது. 'றூட்டைல்' உற்பத்தியின் குறைந்தளவு பயன்பாட்டுத் திறனுக்கு, குறைந்த தர கனிப்பொருள் மணலை உபயோகித்தமை காரணமாகும் இதே வேளையில், தண்ணீர் இன்மையால் தூய்மையாக்கப்பட்ட கனிமக்கல் உற்பத்தி செய்யப்படவில்லை.

விற்பனவுகளின் பெறுமதி, இல்மனைற் ஏற்றுமதியிலிருந்து பெறப்பட்ட கூடிய விலைகளினுல் 1971இல் ரூ. 45 இலட்சத்திலிருந்து 1972இல் ரூ. 74 இலட்சமாக 60 சதவீதம் கொண்ட அதிகரிப்பைப் பதிவுசெய்தது. ஆயினும் விற்பனவு அதிகரித்தபோதும் இக்கூட்டுத்தாபனத்தின் இலாபங்கள், அதிகரித்த கூலிச் செலவினுல் ஏறக்குறைய அதேயளவாகவே இருந்தன. உற்பத்திக்காகப் பயன்படுத்தப்பட்ட மூலதனத்தின் மீதான விளைவு 1972இல் 12.5 சதவீதமாகவிருந்தது.

ஏற்றுமதிகளின் பெறுமதியும் 1971இல் ரூ.45இலட்சத்திலிருந்து ரூ. 72இலட்சமாக அதிகரித்தது. இதேவேளையில் இக்கூட்டுத்தாபனம், ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் அதன் உற்பத்தி வசதிகளை விரிவடையச்செய்து புல்மோட்டையில் இணைக்கப்பட்ட கனிப்பொருள் மணல் தொழிற்சாலையை நிறுவுதற்குத் திட்டமிட்டுள்ளது.

வேலை வாய்ப்பானது 1971இல் 475 ஆக இருந்து 1972 இல் 515 ஆக அதிகரித்தது.

(எ) அடிப்படை உலோகக் கைத்தொழில்கள்

(அ) இலங்கை உருக்குக் கூட்டுத்தாபனம்

உருக்குத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்துக்கான செயற்றிட்டம் இக்கூட்டுத்தாபனத்தின் ஆய்வில் உள்ளது. இதேவேளையில், காரீயம், கலப்பு உருக்கு ஆகியவற்றின் உற்பத்திக்காக உருக்கு ஆலை ஒன்று விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

1972 இல் சுருட்டிய கம்பி, கம்பி ஆகியவற்றின் உற்பத்தியில் சென்ற ஆண்டிலும் பார்க்க அதிகரிப்பு ஏற்பட்டது. இவ்வதிகரிப்பு, உற்பத்திப் பெறுமதி 1971இல் ரூ. 510 இலட்சத்திலிருந்து 1972இல் ரூ. 670 இலட்சமாக அதிகரித்ததிலிருந்து காணக்கூடியதாகவுள்ளது. ஆயினும், மட்டுப்படுத்தப்பட்ட உள்ளூர்க் கேள்வியின் காரணமாக கம்பி சுருட்டும் ஆலையில் அதன் உற்பத்தி இயலளவில் 40 சதவீதமே பயன்படுத்தப்பட்டது.

சுருட்டிய கம்பி விற்பனவுகள் ஏறக்குறைய அதேநிலையில் இருக்கையில், கம்பி உற்பத்திகளின் விற்பனவுகள் 1972 இல் சிறிதளவாக வீழ்ச்சியுற்றன. மொத்த விற்பனவுகள், விற்பனவு விலையில் ஏற்பட்ட பெருமளவு உயர்வினுல் ரூ. 92 இலட்சத்தால் அதிகரித்தன.

1972 இல் ஏற்பட்ட இலாபங்கள் சென்ற ஆண்டின் ரூ. 19 இலட்சத்திற்கு மாருக ரூ. 71 இலட்சமாக விளங்கின. கூடியளவு உற்பத்தியையும், விற்பனவுகளையும் பெறுவதாக மதிப்பிடப்பட்ட அடிப்படையில், 1973ஆம் ஆண்டில் இதன் இலாபங்கள் ஏறக்குறைய இரட்டிக்குமென இக்கூட்டுத்தாபனம் எதிர்பார்க்கின்றது.

**(ஏ) தயாரிக்கப்பட்ட உலோகப் பொருட்கள், எந்திரமும் இணைப்புக்களும்**

(அ) இலங்கை அரச வன்கலக் கூட்டுத்தாபனம்

1972ஆம் ஆண்டில் இக்கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி அதிகரிப்பைப் பதிவுசெய்தது. இவ்வாண்டு இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் படிப்படியாக இல்லாமற் போனமையாலும், விலைகள் அதிகரித்தமையாலும் இக்கூட்டுத்தாபனம் 1970/71 இலும் பார்க்க இதன் மொத்த விற்பனவை ஏறக்குறைய 300 சதவீதத்தால் அதிகரிக்க இயலுமானதாயிருந்தது. இது, 1973 இல் இதன் மொத்த விற்பனவை இன்னேர் 75 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு எதிர் பார்க்கின்றது.

தற்போது மண்வெட்டிகளின் உள்ளூர்த் தேவை ஆண்டொன்றிற்கு ஏறக்குறைய 700,000 ஆகும்; ஆனல், இக்கூட்டுத்தாபனம் ஆண்டொன்றிற்கு 480,000 மண்வெட்டிகளையே உற்பத்திசெய்யும் இயலளவு பெற்றிருக்கின்றது. உள்ளூர்த் தேவையை நிறைவுசெய்யும் முறையில், இக்கூட்டுத்தாபனம், யக்கல தொழிற்சாலையில் மண்வெட்டி செய்யும் பொறியின் ஆற்றலை விரிவடையச் செய்வதற்கான திட்டங்களை வகுத்திருக்கின்றது. 1971 இல் இக்கூட்டுத்தாபனம் ரூ 45 இலட்சம் கொண்ட நட்டத்தை அடைந்தது. 1972 ஆம் ஆண்டிற்கான நிதி பற்றிய முடிவுகள் இன்னும் இறுதி நிலையடையவில்லை. ஆயினும், உற்பத்தி ஒழுங்குகளைத் திருப்பியமைப்பதாலும், விற்பனவு அதிகரிப்பைத் தீவிரமாக ஊக்குவிப்பதாலும் இவ்வாண்டின்போது இக்கூட்டுத்தாபனம் நட்டங்களைக் குறைக்கக் கூடியதாகவிருக்கும்.

4. ஏனைய பொது முயற்சிகள்

**(அ) விவசாயம், காட்டுத்தொழில், கடற்ருெழில்**

(அ) இலங்கைக் கடற்ருெழிற் கூட்டுத்தாபனம்

1972 இல் இக்கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளில் பனிக்கட்டி தவிர்ந்த ஏனைய பொருட்களில் வீழ்ச்சியே ஏற்பட்டுள்ளது.

தகரத்தில் அடைக்கப்பட்ட மீனின் உற்பத்தி அரைப்பங்கிலும் பார்க்கக் கூடியளவு வீழ்ச்சியுற்றது. மொத்த விற்பனவும் 1971 இல் ரூ. 109 இலட்சத்

திலிருந்து 1972 இல் ரூ. 96 இலட்சமாகக் குறைவுற்றது. மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் மீனைத் தகரத்தில் அடைக்கும் தொழிற்சாலை தன் இயலளவிலும் பார்க்க மிகக் குறைந்தளவிலேயே தொழிலாற்றியதென்பது கவனிக்கத்தக்கது.

இவ்வாண்டின்போது இக்கூட்டுத்தாபனம் ரூ. 7 இலட்சம் கொண்ட வெளிநாட்டு செலாவணி பெறுமதியான மீனையும், குளிரூட்டப்பட்ட மீனையும், சுறு மீனையும், ஏற்றுமதி செய்ததுடன் இது 1973 இல் ரூ. 87 இலட்சம் கொண்ட வெளிநாட்டு செலாவணியைப் பெறலாமென எதிர்பார்க்கின்றது.

(ஆ) இலங்கை அரசாங்கப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்

1972 இல் இலங்கை அரசாங்கப் பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் 26 பெருந்தோட்டங்களையும், 4 தொழிற்சாலைகளையும் தனது முகாமைக்குட்படுத்தியது. பெருந்தோட்டங்களின் மொத்தப் பரப்பளவு 32,000 ஏக்கர்

அட்டவணை II (இ) 7

அரசாங்க பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் (அ)

| விடயங்கள் | 1967/68 | 1968/69 | 1969/70 | 1970/71 | 1971/72* |
|---|---|---|---|---|---|
| 1. முதலிடப்பட்ட மூலதனம் (ரூ '000)(ஆ) | 32,000 | 36,290 | 38,414 | 40,965 | 44,624 |
| பெருந்தோட்டங்களில் .. | 25,000 | 29,262 | 31,386 | 33,815 | 37,466 |
| தொழிற்சாலையில் ... | 7,000 | 7,021 | 7,028 | 7,150 | 7,158 |
| 2. பெருந்தோட்டங்களில் | | | | | |
| எண்ணிக்கை ... | 15 | 15 | 13 | 13 | 26 |
| ஏக்கர்கள் ... | 14,734 | 14,250 | 13,015 | 12,827 | 32,009 |
| பயிரிடப்பட்ட ஏக்கர்கள் ... | 6,719 | 9,699 | 9,691 | 9,814 | 20,849 |
| வருவாய் (ரூ. '000) ... | 5,184 | 4,740 | 4,403 | 5,936 | 25,834 |
| இலாபம்(+) அல்லது(இ) நட்டம்(—) (ரூ. '000) (இ)... | + 725 | + 12 | + 30 | + 448 | + 1,750 |
| தொழில்நிலை ... | 8,594 | 7,389 | 6,202 | 6,775 | 18,079 |
| 3. தொழிற்சாலைகள் | | | | | |
| எண்ணிக்கை ... | 4 | 4 | 4 | 4 | 4 |
| வருவாய் (ரூ. '000) ... | 1,125 | 4,175 | 3,081 | 3,802 | 4,325 |
| இலாபம்(+) அல்லது நட்டம்(—) (ரூ. '000) (இ)... | — 77 | — 109 | — 145 | + 29 | — 144 |
| தொழில்நிலை ... | 356 | 351 | 298 | 226 | 271 |
| 4. மொத்தம் (வருவாய் ரூ '000) ... | 6,309 | 8,951 | 7,484 | 9,738 | 30,159 |
| இலாபம்(+) அல்லது நட்டம்(—) (ரூ. '000) (இ)... | + 295† | + 11† | + 115 | + 477 | + 1,606 |
| 5. தொழில்நிலை ... | 8,950 | 7,740 | 6,500 | 7,001 | 18,350 |

மூலம்; அரசாங்க பெருந் தோட்டக் கூட்டுத்தாபனம்

(அ) எண்தொகைகள் ஒத்தோபர் – செத்தெம்பர் வரையிலான கணக்காண்டுக்குரியவை; ஆனால் 1971/72 ஆம் ஆண்டிற்குரிய எண்தொகைகள் 1972 திசெம்பரில் முடிவடையும் 15 மாத காலப் பகுதிக்குரியவையாகும்.

(ஆ) கணக்காண்டு முடிவில் உள்ளபடியான மொத்தத் தொகை

(இ) வரிவிதிப்பதற்கு முந்திய இலாபம்

† கணக்காய்வு அதிபதியின் அறிக்கையின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்ட எண்தொகைகள்

* மதிப்பிடப்பட்ட எண் தொகைகள்.

களால் அதிகரித்தது; இவற்றில் 20,849 ஏக்கர்கள் பயிரிடப்பட்டன. மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் பெருந்தோட்டத் தொழிற்பாடுகளிலிருந்து பெற்ற வருவாய் இவ்வாண்டின்போது ரூ. 258 இலட்சம் கொண்ட அளவிற்குக் கணிசமானளவு அதிகரித்தது.

மொத்தமாகப் பார்க்கும்போது பெருந்தோட்டங்களையும், தொழிற்சாலைகளையும் உள்ளடக்கிய இக்கூட்டுத்தாபனத்தின் இலாபம் 1970/71 இன் ரூ. 4 இலட்சத்துடன் ஒப்பிடுகையில், 1972 டிசெம்பரில் முடிவடைந்த 15 மாத காலப்பகுதியில் ரூ. 16 இலட்சம் கொண்ட அதிகரித்த இலாபத்தைப் பதிவு செய்தது. ஆயினும், 1972இன் தற்காலிகத் தரவுகளின்படி, இக்கூட்டுத்தாபனம் தொழிற்சாலைகளின் முகாமையில் சென்ற ஆண்டில் ஏற்பட்ட ரூ. 30 ஆயிரம் கொண்ட இலாபத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 1இலட்சத்து 40 ஆயிரம் கொண்ட நட்டத்தையடைந்துள்ளது

**(ஆ) போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்புகள்**

(அ) இலங்கைப் போக்குவரத்துச் சபை

இச்சபை, 1972 செத்தெம்பர் 31 இல் முடிவடைந்த நிதியாண்டின்போது ரூ. 308 இலட்சம் பெறுமதியுள்ள பேருந்துகளையும், பேருந்து இயந்திரங்களையும் இறக்குமதி செய்தது. இதற்கு மாறாக சென்றாண்டில் இத்தொகை ரூ. 265 இலட்சமாக விளங்கியது. இது, தேவையான வாகனங்களின் எண்ணிக்கைக்கும், கிடைக்கத்தக்க பாவனையிலுள்ள பேருந்துகளின் எண்ணிக்கைக்கும் இடையிலுள்ள இடைவெளியைக் குறைப்பதற்குத் துணைநின்றது.

1971/72 இல் திட்டமிடப்பட்ட மைல்கள் 107 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில் ஓடிய மைல்கள் சென்றாண்டிலும் பார்க்க 298 இலட்சம் மைல்களால் அதிகரித்துள்ளன. பேருந்து பழுதடைந்தமையாலும் தேவையான நேரத்தில் பேருந்திற் பணிபுரிவோர் கிடைக்காதமையாலும் 1970/71 இல் ஏற்பட்ட ரூ. 613 இலட்சங்கொண்ட மைல் ஓட்ட இழப்பை 1971/72 இல் 501 இலட்சமாகக் குறைப்பதில் இச்சபை வெற்றியடைந்துள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. இதே வேளையில் பேருந்து தங்குமிடத்திலிருந்து பயணத்தினை ஆரம்பிக்கின்ற இடங்களுக்கு வெறுமனே ஓடிய மைல்கள் சிறிதளவு அதிகரித்தன.

இச்சபையில் வேலை வழங்கப்பட்டோரின் நிலை தொடர்ந்தும் அதிகரித்தமையால் 1971/72இல் மொத்த வேலையாட்களின் எண்ணிக்கை 51,301 ஆக அல்லது சென்றாண்டிலும் பார்க்க 3,161 ஆகக் கூடுதலாகவிருந்தது. கிடைக்கத்தக்க பாவனையிலுள்ள பேருந்துகளில், தனிப்பேருந்திற் பணிபுரிந்த ஊழியர்களின் சராசரி எண்ணிக்கை 1970/71 இல் 10 ஆக இருந்ததற்கு மாறாக 1971/72 இல் 8 ஆக இருந்தது.

மீளப்பார்வையிடும் காலப்பகுதியில் இச்சபையின் செலவு ரூ. 460 இலட்சத்தால் ரூ. 4,120 இலட்சத்திற்கு அதிகரித்தது. இச்சபையின் கூலிச்செலவுகள்

# அட்டவணை II (இ) 8

## போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்புகள்

| இலங்கை அரசாங்கப் புகைவண்டித் திணைக்களம் 1 | 1966/67 | 1967/68 | 1968/69 | 1969/70 | 1970/71* |
|---|---|---|---|---|---|
| 1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம் (ரூ. '000)2 .. | **614,300** | **639,132** | **665,679** | **687,454** | **689,230** |
| 2. பாதை மைல்களில் ... | **1,053** | **1,053** | **1,076** | **1,080** | **1,080** |
| 3. ஊர்திகள் (எண்ணிக்கை) ... | **8,067** | **7,353** | **7,484** | **7,400** | **7,390** |
| (அ) தொடர்வண்டி இயக்கும் பொறிகள் .. | 355 | 344 | 393 | 328 | 328 |
| (ஆ) வண்டிகள் ... | 7,712 | 7,009 | 7,091 | 7,072 | 7,062 |
| 4. நடைபெற்ற போக்குவரத்து ... | | | | | |
| (அ) பயணத்தர்கள் (ப. இ.) 4 ... | 78.6 | 81.5 | 85.5 | 84.62 | 82.86 |
| (ஆ) பொருட்கள் (ப. இ. தொன்கள்)5 ... | 1.8 | 1.8 | 1.8 | 1.70 | 1.78 |
| 5. போக்குவரத்து மைல்கள் .. | | | | | |
| (அ) பயணத்தர் மைல்கள் (ப. இ. மைல்கள்) ... | 1584.9 | 1678.3 | 1781.2 | 1825.8 | 1884.1 |
| (ஆ) பொருட்கள் மைல்கள் (ப. இ. தொன்) மைல்கள் | 211.9 | 221.5 | 220.0 | 228.3 | 205.9 |
| 6. மொத்த வருமானம் (ஆயிரம் ரூபாய்களில்) .. | **102,100** | **106,769** | **109,681** | **117,042** | **118,831** |
| (அ) பயணத்தர்கள் | 50,600 | 53,944 | 57,038 | 60,293 | 44,637 |
| (ஆ) பொருட்கள் ... | 43,300 | 44,154 | 43,913 | 46,337 | 50,975 |
| (இ) ஏனையவை ... | 8,200 | 8,671 | 8,730 | 10,412 | 23,219 |
| 7. மொத்தச் செலவு (ரூ. '000)6 ... | **148,300** | **168,844** | **140,679** | **144,010** | **147,010** |
| 8. இலாபம் (+) அல்லது (−) நட்டம் (ரூ. '000)7 | | | | | |
| (அ) தொழிற்படுகையில் .. | −22,869‡ | − 22,900 | −30,988 | − 27,022 | −28,178 |
| (ஆ) முழுமையாக ... | −46,164 | − 47,666 | −57,438 | − 55,122 | −57,438 |
| 9. தொழில் நிலை | | | | | |
| (அ) தொழிலிலமர்த்தப்பட்டோர் எண்ணிக்கை8 | 26,038 | 24,965 | 23,826 | 25,388 | 26,169 |
| (ஆ) மொத்தக் கூலிச் செலவு (ரூ. '000)9 | 82,600 | 87,250 | 98,576 | 105,201 | 108,514 |
| **இலங்கைப் போக்குவரத்துச் சபை 1** | 1967/68 | 1968/69 | 1969/70 | 1970/71 | 1972 |
| 1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம்2 (ரூ.' 000) .. | **246,110** | **267,369** | 320,392 | **376,494** | **வி. கி.** |
| (அ) ஊர்திகள் ... | 195,349 | 211,506 | 251,942 | 294,364 | வி. கி. |
| (ஆ) ஏனையவை ... | 50,761 | 55,863 | 68,450 | 82,130 | வி. கி. |
| 2. வாகனங்களின் (எண்ணிக்கை) .. | | | | | |
| (அ) சொந்தத்திலிருந்தவை ... | 5,457 | 5,881 | 5,923 | 6,412 | 6,428 |
| (ஆ) இயங்கும் வாகனங்களின் தொகை .. | 4,721 | 5,110 | 5,625 | 5,816 | 5,923 |
| (இ) இயங்கமுடியுமான தொகை . | 3,772 | 4,077 | 4,524 | 4,690 | 5,799 |
| (ஈ) தேவையானவை | 3,939 | 4,085 | 4,724 | 4,957 | 5,133 |
| (உ) இயங்கிய சராசரி .. | 3,700 | 3,935 | 4,170 | 4,409 | 4,808 |
| 3. மைல்களின் தொகை (ப. இ. மைல்களில்) | | | | | |
| (அ) அட்டவணையிடப்பட்ட .. | 239.4 | 249.9 | 269.5 | 295.6 | 311.9 |
| (ஆ) இயங்கிய ... | 211.2 | 217.4 | 233.8 | 236.5 | 270.9 |
| (இ) இழந்த ... | 28.2 | 32.5 | 42.8 | 62.6 | 50.1 |
| (ஈ) பாவிக்கப்படாத ... | 2.3 | 1.9 | 1.5 | 1.2 | 2.2 |
| 4. பயன்படுத்தப்பட்ட திறன் | | | | | |
| (அ) மொத்த ஆசன மைல்கள் (ப. இ. மைல்கள்) .. | 11,386.8 | 11,643.5 | 12,333.7 | 12,266.1 | 14,361.2 |
| (ஆ) கொண்டு செல்லப்பட்ட மொத்தப் பயணத்தர்கள் (ப. இ. எண்) ... | 1,250.1 | 1,313.6 | 1,357.7 | 1,337.0 | 1,391.6 |
| (இ) மொத்தப் பயணத்தர் மைல்கள் (ப. இ. மைல்கள்) ... | 6,823.5 | 7,156.5 | 7,394.4 | 7,377.4 | 8,741.3 |
| (ஈ) பார அம்சம் (%) .. | 59.9 | 61.5 | 60.0 | 60.1 | 60.9 |
| (உ) பயன்படுத்தப்பட்ட சராசரி வாகனங்கள் — (ஒரு நாளுக்கு மைல்கள்) .. | 157 | 157 | 154 | 147 | 154 |
| 5. வருமானம் (ரூ. '000) | **265,600** | **279,500** | **287,916** | **306,159** | வி. கி. |
| (அ) பயணத்தர் கட்டணம் ... | 259,600 | 273,600 | 280,143 | 297,661 | வி. கி. |
| (ஆ) ஏனையவை . | 6,000 | 5,900 | 7,773 | 8,498 | வி. கி. |
| 6. செலவு (ரூ. '000) 10 ... | **272,900** | **292,200** | **322,100** | **369,398** | **412,212** |
| 7. சம்பளச் செலவு (ரூ. '000) ... | **149,700** | **163,300** | **180,300** | **197,102** | **225,256** |
| 8. தொழில் நிலை (எண்தொகை)8 ... | **37,547** | **40,097** | **40,832** | **47,792** | **51,301** |
| 9. இலாபம் (+) அல்லது (—) நட்டம் எ (ரூ. '000)7 ... | **− 7,195** | **− 14,046** | **−34,187**13 | **− 63,239** | **−10,140** |
| **இலங்கை விமானச் சேவை1** | 1967/68 | 1968/69 | 1969/70* | 1970/71* | 1972 |
| 1. சொத்துக்களின் பெறுமதி2 (ரூ. '000) | **13,698** | **22,149** | **80,304** | **140,304** | |
| 2. கொண்டு செல்லப்பட்ட பயணத்தர்களும் பொருட்களும் | | | | | |
| (அ) பயணத்தர்கள் (எண்ணிக்கை) ... | 80,880 | 78,666 | 98,351 | 119,479 | |
| (ஆ) பொருட்கள் (தொன்கள்) ... | 550 | 523 | 576 | 630 | |
| 3. பயணத்தர் மைல்களும் தொன் மைல்களும் | | | | | |
| (அ) பயணத்தர் மைல்கள் (ரூ. '000) . | 60,577 | 59,619 | 69,545 | 69,710 | |
| (ஆ) பொருட்கள் தொன் மைல்கள் (ரூ. '000) . | 7,322 | 1,883 | 1,779 | 1,620 | |
| 4. பயன்படுத்தப்பட்ட திறன் (பார அம்சம்%) | | | | | |
| (அ) உள்நாட்டுச் சேவைகள் ... | 56.4 | 67.1 | 59.6 | 53.5 | வி. கி. |
| (ஆ) பிரதேச சேவைகள் .. | 50.3) | | | | |
| (இ) பன்னாட்டுச் சேவைகள் . | 48.0) | 43.1 | 31.8 | 33.0 | வி. கி. |
| 5. மொத்த வருமானம் (ரூ. '000) ... | **10,593** | **3,274** | **17,546** | **19,097** | **52,389** |
| 6. மொத்தச் செலவு (ரூ. '000) ... | **7,952** | **1,279** | **18,237** | **55,549** | **42,019** |
| 7. இலாபம் (+) அல்லது (—) நட்டம் (ரூ. '000) 7 .. | **+ 2,571** | **+ 1,995‡** | **— 691** | **+ 2,078** | **+ 3,517** |
| 8. தொழில் நிலை (எண்ணிக்கை)8 . | **553** | **609** | **681** | **716** | **806** |

## அட்டவணை II (இ) 8

### போக்குவரத்து, களஞ்சியப்படுத்தல், செய்தித் தொடர்புகள்

| இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனம் ... | 1967/68 | 1968/69 | 1969/70 | 1971 | 1972* |
|---|---|---|---|---|---|
| 1. அரசாங்கத்தினல் வழங்கப்பட்ட மூலதனம் (ரூ.'000) .. | — | — | — | 8,160 | 17,660 |
| 2. மொத்த வருமானம் (ரூ. '000) .. அவற்றின் வெளிநாட்டுச்செலாவணி வருமானம் ... | — | — | — | 1,765 | 2,002 |
| 3. மொத்தச் செலவு (ரூ. '000) | — | — | — | 1,010 | 1,292 |
| 4. இலாபம் (+)/நட்டம்(—)7 (ரூ. '000) | — | — | — | + 1,812 | 710 |
| 5. தொழில் நிலை8 | — | — | — | 108 | 116 |
| **கொழும்புத் துறைமுக ஆணைக் குழு 1** | **1968/69** | **1969/70** | **1970/71** | **1971/72*** | |
| 1. மூலதனச் செலவு 2, 3 (ரூ.'000) .. | 312,294 | 326,772 | 343,761 | 380,983 | |
| (அ) கொழும்புத் துறைமுகம் ... | 280,443 | 289,059 | 303,852 | 337,691 | |
| (ஆ) காலித் துறைமுகம் ... | 29,087 | 31,914 | 33,610 | 34,169 | |
| (இ) திருகோணமலைத் துறைமுகம் | 1,806 | 2,100 | 2,331 | 4,551 | |
| (ஈ) ஏனைய துறைமுகம் ... | 958 | 3,699 | 3,968 | 4,572 | |
| 2. வருமானம் (ரூ. '000) ... | 41,029 | 44,414 | 50,574 | 51,716 | |
| (அ) கொழும்புத் துறைமுகம் ... | 40,750 | 44,048 | 50,309 | 51,314 | |
| (ஆ) வெளித் துறைமுகங்கள் ... | 279 | 366 | 265 | 402 | |
| (i) காலித் துறைமுகம் ... | 33 | 60 | 72 | 134 | |
| (ii) திருகோணமலைத் துறைமுகம் ... | 217 | 266 | 179 | 257 | |
| (iii) ஏனைய துறைமுகங்கள் ... | 29 | 40 | 14 | 11 | |
| 3. வேலைச் செலவு (ரூ. '000) 15 ... | வி. இ. | 30,419 | 30,551 | 30,293 | |
| (அ) கொழும்புத் துறைமுகம் ... | 26,762 | 30,015 | 29,785 | 29,124 | |
| (ஆ) ஏனைய துறைமுகங்கள் ... | வி. இ. | 379 | 742 | 1,140 | |
| (இ) கரையோரப் பாதுகாப்பு ... | வி. இ: | 25 | 23 | 29 | |
| 4. மிகை (+) அல்லது குறை (—) 14 ரூ. '000 ... | + 6,590 | — 4,448 | + 3,031 | + 2,595 | |
| (அ) கொழும்புத் துறைமுகம் ... | வி. இ. | + 5,252 | + 5,728 | + 4,554 | |
| (ஆ) ஏனைய துறைமுகங்கள் .. | வி. இ. | — 9,700 | — 2,697 | — 1,959 | |
| 5. தொழில் நிலை8 (எண்தொகை) ... | 8,489 | 8,647 | 9,013 | 9,456 | |
| **துறைமுகச் சரக்குக் கூட்டுத்தாபனம்1 ...** | **1967/68** | **1968/69** | **1969/70** | **1970/71*** | **1972** |
| 1. முதலீடு செய்யப்பட்ட மூலதனம்2 (ரூ. '000) ... | 64,200 | 51,637 | 53,608 | 54,324 | 55,455 |
| (அ) கொழும்பு ... | 58,100 | 50,137 | 50,137 | 50,137 | 50,137 |
| (ஆ) காலி .. | 6,100 | 1,500 | 1,500 | 1,500 | 1,500 |
| (இ) திருகோணமலை ... | — | — | 1,971 | 2,687 | 3,818 |
| 2. கையாளப்பட்ட பொருட்கள் (தொ. '000) ... | 3,185 | 3,531 | 30,71 | 2,984 | 2,703 |
| (அ) கொழும்பு ... | 2,906 | 3,223 | 2,757 | 2,729 | 2,485 |
| (ஆ) காலி ... | 56 | 47 | 59 | 62 | 24 |
| (இ) திருகோணமலை | 223 | 261 | 255 | 193 | 194 |
| 3. வருமானம் (ரூ. '000) ... | 86,700 | 115,500 | 123,560 | 122,710 | 120,167 |
